**அ.வ.எண். 33/2014**
**பி.வா.சா.1 : தெய்வாணை**
**தேதி : 03.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

அ.வ.எண்.590/2011 என்ற வழக்கு பற்றி தெரியுமா என்றால் காமாட்சி அம்மன் கோவிலில் கோகுல் என்ற பையனை எடுத்து வந்தோம். இந்த வழக்கை மேற்சொன்ன கோகுல் தான் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எனக்கு 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை குறித்து தெரியும். வாதி கோகுல் 1ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கரூர் சேரன் பள்ளியில் படித்தார். ராமலிங்கம் என்பவர் தான் வாதி கோகுலுக்கு அப்பா என்று கையெழுத்து போட்டு பள்ளியில் சேர்த்துள்ளார் என்று சொன்னால் பள்ளியில் பெற்றோர்கள் பெயர் தேவைப்பட்டதால் என் கணவர் கையெழுத்து செய்துள்ளார். என் கணவரின் குலதெய்வம் நாமக்கல் மாவட்டம் புதன் சந்தையில் உள்ள காமாட்சி அம்மன் கோவில். நான் கொங்கு வெள்ளாளக்கவுண்டர் சமூகத்தை சார்ந்தவர். வாதி கோகுலில் பெற்றோர் யார் என்றும் அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தர்கள் என்றும் தெரியாது. கோகுலின் சாதிச்சான்றிதழில் கொங்கு வெள்ளாளக்கவுண்டர் என்று தான் உள்ளது என்று சொன்னால் சரிதான் பள்ளியில் சேர்க்கும்போது என் கணவரின் பெயரை கொடுத்ததால் சாதிச்சான்றிதழில் அவ்வாறு வந்தது. உங்கள் கணவருக்கு தாசில்தாரிடம் வாரிசு சான்றிதழ் வாங்கினீர்களா என்றால் தெரியாது. என் கணவருக்கு இறப்பு சான்றிதழ் பெற்றுள்ளேன். என் கணவரின் தாயார் பெயர் பழனியம்மாள். என் கணவருக்கு கரூர் தாசில்தார் நீங்கள், வாதி, உங்கள் கணவரின் தாயார் பழனியம்மாள் வாரிசு என்று கொடுத்துள்ளார் என்று சொன்னால் நான் வேண்டாம் என்று சொன்னேன் அவர்கள் கொடுத்துவிட்டார்கள். என் கணவர் கோ–ஆபரேட்டிவ் வங்கியில்

வேலை பார்த்தார். உங்கள் கணவருக்கு வாரிசு சான்றிதழ் எவ்வாறு வாங்குவது, பத்திரம் எவ்வாறு வாங்குவது என்பது குறித்து தெரியும் என்று சொன்னால் சரிதான். பிரச்சனைக்குரிய சொத்துக்களை தவிர என் கணவர் ராமேசுவரப்பட்டியில் 3 ஏக்கர் வாங்கியுள்ளார். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உங்கள் கணவருக்கு அவரது சகோதரிகள் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் சகோதரிகளின் கணவர்களும் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார்கள் என்ற சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உங்கள் கணவர் இறக்கும் வரை அதில் கண்டுள்ள வாசகங்கள் தவறு என எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் 2003 ல் விபத்தில் இறந்தார். உங்கள் கணவர் இறந்ததற்கு நீதிமன்றத்தில் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நான் மனுவில் கையொப்பம் செய்தேன் நான் சென்று வழக்காடவில்லை. மேற்சொன்ன வழக்கில் நீங்களும், வாதியும் வாரிசு என்று வழக்கை நடத்தியுள்ளீர்கள் என்று சொன்னால் நான் நடத்தவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து உங்கள் பெயரிலும் 1ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா வந்துள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. கோகுல் நடராஜனுக்கு எழுதிக்கொடுத்த கிரையம் ஆவணம் பற்றி எனக்கு நேரில் தெரியாது கேள்விப்பட்டேன். எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று தெரியாது. உங்கள் கணவர் வாதி தன்னுடைய மகன் என்ற அடிப்படையில் தான் பள்ளி சான்றிதழ், வாரிசு சான்றிதழ் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் மகன் என்ற அடிப்படையில் தான் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் அந்த கையொப்பங்கள் அனைத்தும் வாதியை வளர்த்ததினால் போட்டார். வாதி உங்கள் மகன் என்ற அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ.7 ஆவணம் ஏற்பட்டது என்று சொன்னால்

சரியல்ல. வாதியின் பெயர் காமாட்சி பெரியசாமி என்பதிலிருந்து கோகுல் என்று மாற்றிக்கொண்டார் என்று சொன்னால் வாதியே மாற்றிக்கொண்டார். அரசிதழில் 29.08.2005 ஆம் தேதியில் என் மகனின் பெயரை காமாட்சி பெரியசாமி என்பதிலிருந்து கோகுல் என்று மாற்றிக்கொண்டார் என்று உங்கள் பெயரில் தமிழ் நாளிதழில் நீங்கள் விளம்பரம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் வாதியே விளம்பரம் செய்து என் பெயரை போட்டுக்கொண்டார். குடும்ப அட்டையிலும் வாதியின் பெயரும் உங்கள் பெயரும் தான் இருந்தது என்று சொன்னால் என் பெயரும் வாதியின் பெயரும் சேர்க்க வேண்டும் என்று வாதி அடம்பிடித்ததால் போட்டுக்கொண்டார். நீங்கள் குடும்ப அட்டையில் வாதியின் பெயரை காமாட்சி பெரியசாமி என்பதிலிருந்து கோகுல் என்று நீங்கள் மனு செய்ததால் தான் மாற்றப்பட்டது என்று சொன்னால் வாதியே மாற்றிக்கொண்டார். எனக்கு தற்போது 70 வயதாகிறது. வாதி கோகுலுக்கு 35 வயதிருக்கும். நீங்கள் வாதியை உங்கள் குலதெய்வக்கோவிலிருந்து எடுத்து வந்ததிலிருந்து உங்கள் சொந்த மகனாகத்தான் வளர்த்து வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கும் வாதிக்கும் எப்போது இருந்து பிரச்சனை ஏற்ப்பட்டது என்றால் வாதி அப்பா இறந்தபோது வாதிக்கு 15 வயதிருக்கும். அப்போது வாதி மது அருந்துவதால் பிர்ச்சனை இருந்தது. வாதி மது அருந்தி என் கழுத்தை பிடிப்பார். வாதிக்கு கோவை கல்லூரியில் சேர்க்கும்போது 18, 19 வயதிருக்கும். வாதிக்கு குடிப்பழக்கம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வெங்கமேடு காவல்நிலையத்தில் வாதி கடத்திவிட்டார்கள் என்று புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான் வாதியை நடராஜன் கடத்திவிட்டார் என்று புகார் கொடுத்தேன். வாதியை கடத்திவிட்டார்கள் என்று யார் கூறினார்கள் என்றால் ஞாபகமில்லை. மேற்சொன்ன விவரத்தை வக்கீல்

பன்னீரை வைத்து பேப்பரில் விளம்பரம் கொடுத்தேன். மேலும் நடராஜன் மீது பல வழக்குகள் உள்ளது. நடராஜன் மீது வேறு வழக்குகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வெங்கமேடு காவல்நிலையத்தில் பிரபு வாதி கோகுலை கடத்திவிட்டார் என்று புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் ஞாபகமில்லை. ஆய்வாளர் நீங்கள் புகார் கொடுத்த பிறகு உங்களையும், பிரபுவையும், கோகுலையும் விசாரித்தார் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. கோகுல் காவல்நிலையத்தில் பிரபு என்னை கடத்தவில்லை என்றும் மேலும் அவர் தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னதால் அந்த புகார் முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோகுல் உங்கள் மகன் தான் என்றும் சொத்துக்களுக்காக அவரை மகன் இல்லை என்று வாதாடி வருகிறீர்கள் என்று சொன்னால் கோகுலுக்கு எந்த உரிமையும் இல்லை. கோகுலுக்கு சட்டப்படி அவருக்குண்டான சொத்தை கிரையம் கொடுப்பதற்கு உரிமை உள்ளது என்றும் அந்த அடிப்படையில் 1ம் பிரதிவாதி நடராஜனுக்கு அவர் பங்கை கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் கோகுலுக்கு எந்த உரிமையும் நாங்கள் கொடுக்கவில்லை கோகுலை வளர்த்து படிக்க வைத்து சாப்பாடு போட்டோம். நீங்கள் உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் கோகுல் உங்கள் மகன் இல்லை என்று பல இடங்களில் கூறியுள்ள அனைத்தும் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கும் கோகுலுக்கும் தத்தெடுத்ததை தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதால் தான் நீங்களும் கோகுலும் ஒன்று சேர்ந்து 1ம் பிரதிவாதியை ஏமாற்றி வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கோகுல் உங்கள் மகன் என்பதால் தான் உங்கள் கணவர் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கோகுலை உங்கள் கணவரின் மகன் என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் கோகுலுக்கு எந்த சடங்கும் செய்யவில்லை சாப்பாடு

போட்டு துணிமணி எடுத்துக்கொடுத்தோம். உங்கள் உறவினர்கள் முன்னிலையிலும் நண்பர்கள் இடத்திலும் சமூகத்திலும் கோகுலை உங்கள் மகனாக காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு ஒரு கூட்டுரிமையாளருக்கு எதிராக நிலைநிறுத்தத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்து முதலில் தோட்டமாக இருந்தது தற்போது காடாக உள்ளது. அதில் சாளை வீடு இருந்ததா என்றால் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்தில் ஒரு சாளை வீடு இருந்து என்றும் அதற்கு மின் இணைப்பு இருந்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன சாளையின் மின்இணைப்பு நடராஜன் பெயரில் இருந்தது என்று சொன்னால் அவர் தெரியாமல் வாங்கிவிட்டார். நீங்களும் உங்கள் மகனும் பொய்யாக இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை மனுவும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நடராஜன் தாவா சொத்துக்களில் கூட்டாக சுவாதீனத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.03 19:18:33 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.